Registered as News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 05 (22 - 10 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 246

## பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் தெரிவிற்கு போட்டிப் பரீட்சை

பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்காக தகுதியானவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான 1991ஆம் ஆண்டுக்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம் யாழ். கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட 18ஆம் திகதி வர்த்தமானி கல்வித்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்கள் தேவையானோர் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம் என பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ சுந்தர (4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ ஆக்கிரமிப்பு முஸ்தீபுகள்: சமாதான முயற்சிகளை பாதிக்கும்

## கறுப்பசாமி வெளியேறினார்

சிறிலங்கா அரசாங்கத்தால் வெளியேற்றப்பட்ட இந்திய நிருபர் ஏ. கறுப்பசாமி நேற்று இந்தியாவிற்கு சென்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சபாநாயகர் தமது பதவியை ராஜினாமாக் கடிதத்தை அந்நாட்டு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் கொடுத்துள்ளார் என உண்மைக்குப் புறம்பான செய்தியொன்றை வெளியிட்டார் என்ற காரணத்தைக்காட்டி சிறிலங்காவிலிருந்து வெளியேற உத்தரவு வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே

## இந்தியப் படையினரே தேர்தலுக்கு உதவினர் - பிரேமச்சந்திரா

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினையை இந்தியாவின் ஒத்துழைப்பு உதவியின்றி தீர்க்க முடியாது இலங்கையின் இறைமை ஐக்கியத்தை பாதுகாக்கவும் எதிர்கால நலனுக்காகவும் இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கை வந்தனர்.

இவ்வாறு கடந்த வியாழன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அரசுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் தற்போதைய இராணுவ ஆக்கிரமிப்பு முஸ்தீபுகள் தமிழர் தேசிய பிரச்சினைக்கு சமாதான பேச்சுகள் வாயிலாக தீர்வுகாணும் முயற்சிகளுக்கு பாதகமாக அமையுமென விடுதலைப் புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளும், விசமத்தனமான பொறுப்பற்ற பிரசாரங்களும், தமிழ் மக்களைக் கிலி கொள்ளச் செய்யும் அச்சுறுத்தல்களும் விடுதலைப் புலிகளைக் கடுமையான நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்லலாமென இப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

"இவ் வருட ஆரம்பத்திலிருந்து விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை சம்பந்தமாக சிங்கள அரசுக்கு நல்லெண்ண சமிக்ஞைகளை காட்டிவந்தனர். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு தாம் என்றும் தயார் என வலியுறுத்தி வந்தனர் தமிழர் பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கவும் முன்வந்தனர் ஆனால் சிங்கள அரசு சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எவ்வித உருப்படியான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. பதிலாக, தமிழர் தாயகத்தில் இராணுவ நடவடிக்கைகளையே தீவிரப்படுத்தியது" என்று மேலும் இப்பேச்சாளர் சுட்டிக் காட்டினார்

"தமிழ் மக்களின் தாயகப் பூமியை ஆக்கிரமித்து, இராணுவ மேலாதிக்க நிலையை எட்டுவதற்கு இதுவரை காலமும் சிங்கள அரசு முனைந்து வந்திருக்கிறது. இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு தமிழர் மீது தான் விரும்பியவாறு ஒரு தீர்வைத் திணிக்கவே அரசு முற்படுகிறது என்பது தெட்டத்தெளிவாகியுள்ளது. ஆனால் சிங்கள அரசு இராணுவ மேலா [4ஆம் பக்கம் பார்க்க]

## தீவுப்பகுதி மோதல்

## வடபகுதி இராணுவ தளபதி நிகால் குணவர்த்தன காயம்

(கொழும்பு)

தீவுப்பகுதியில தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற உக்கிர மோதலில் வடபகுதி இராணுவத் தளபதி நிகால் குணவர்த்தன உட்பட பல இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தீவகப்பகுதிகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இப்பகுதிகளைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளில சிறிலங்கா இராணுவத்தினர் இறங்கியுள்ளனர் என்றும், கொழும்பு பாதுகாப்பு அமைச்சை ஆதாரம் காட்டி கொழும்பு பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

## மீனவர் மீது கடற்படை தாக்கு

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதிக்கு அண்மையிலுள்ள கல்முனைக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள்மீது சிறிலங்காப்படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று இப்பகுதிகளுக்கு மீன்பிடிப்படகுகளில் பல மீனவர்கள் சென்றபோது சிறிலங்காப்படையினராலும், அவர்களுடனிருந்த தேசவிரோதக் கும்பல்களினாலும் சில மீனவர்கள் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து இம்மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் கடற் பிராந்தியத்தில் நின்ற அனைத்து மீனவர்களும் கரையை வந்தடைந்துவிட்டனர். (க)

## கல்முனை, கௌதாரிமுனை மீது சிறிலங்கா கடற்படை ஒருமணிநேர பீரங்கித் தாக்கு

(பூநகரி)

நேற்று திங்களன்று பிற்பகல் 3-30 மணியளவில் பூநகரி கல்முனைக் கடலுக்கு வந்து சேர்ந்த சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகு கல்முனை, கௌதாரிமுனை ஒருவரைப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது.

மாலை 4-30 மணிவரை 4ஆம் பக்கம் பார்க்க

## புங்குடுதீவிலிருந்து அர்ச்சகர் தப்பி வந்தனர்

(யாழ்ப்பாணம்)

மேலும் செல்லும் போது

...தைகளுக்கு நாம் என்றும் தயார் என வலியுறுத்தி வந்தனர் தமிழர் பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சிகளை மேற்கொண்டு இருந்த வெளிநாட்டு பிரதி... பதிலாக, தமிழர் தாயகத்தில் இராணுவ நடவடிக்கைகளையே தீவிரப்படுத்திடுது'' என்று மேலும் இப்பேச்சாளர் சுட்டிக் காட்டினார். ''தமிழ் மக்களின் தாயகப்... விரும்பியவாறு ஒரு தீர்வைத் திணிக்கவே அரசு முற்படுகிறது என்பது தெட்டத்தெளிவாகியுள்ளது. ஆனால் சிங்கள அரசு இராணுவ மேலா...

[4ஆம் பக்கம் பார்க்க]

...லங்கா படையினர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று இப்பகுதிகளுக்கு மீன்பிடிப்படகுகளில் பல மீனவர்கள் சென்றபோது சிறிலங்கா கடற்படையினராலும், அவர்... தொடர்ந்து இம்மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இதனால் கடற் பிராந்தியத்தில் நின்ற அனைத்து மீனவர்களும் கரையை வந்தடைந்து விட்டனர். (க)

# புங்குடுதீவிலிருந்து அர்ச்சகர் தப்பி வந்தனர்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் பூசகர் அந்த கோயிலினுள் ஒன்றரை நாட்கள் பதுங்கி இருந்து விட்டு யாழ் குடா நாட்டிற்குள் இரகசியமாக இரவோடிரவாக தப்பிவந்துள்ளனர்.

அவர் தமது அனுபவத்தை மேலும் சொல்லும் போது நாம் அந்த கோயிலில் ஒளிந்திருந்த சமயம் கோவிலின் உள்ளே இராணுவமும் மாற்றுக் குழுக்களைசேர்ந்தவர்களும் வந்து கோவில் வளவினுள் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு சென்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு இராணுவத்தினர் கோயிலை விட்டு அகன்றபின்னர் நாம்

(4ம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த வடமராட்சி மக்களுக்கு நிவாரணம் ஒருவாரம் மட்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தில் வடமராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து வேறிடங்களில் தஞ்சமடைந்திருக்கும் அகதி மக்களுக்கு ஒரு வார காலத்திற்குரிய உலர் உணவுப் பொருள்கள் மட்டுமே வழங்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீவகப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு அரசாங்கத்தின் உத்தரவிற்கிணங்க தொடர்ந்து உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்படும் என்றுயாழ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புச் செய்திகளுக்கு விடுதலைப்புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். வந்த 'குவேக்கர்ஸ்' சர்வதேச சமாதானக் குழுவிடம் விடுதலைப் புலிகள் தமிழர் பிரச்சினை சம்பந்தமான எதுவித தீர்வுத் திட்டம் பற்றியும் பேசவில்லையென கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை விடுதலைப் புலி வட்டாரங்கள் மறுத்துள்ளன.

தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வுத் திட்டத்தை நாம் பரிசீலனை செய்யத் தயாரென இக் குழுவிடம் விடுதலைப் புலிகள் தெளிவாக எடுத்துரைத்ததோடு, பேச்சுவார்த்தைகளுக்கு முதற் படியாக

[4ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு கிழக்கில் யுத்த முயற்சிகள் முடிவை எட்டுகின்றன

- பிரேமதாசா

''வடக்குக் கிழக்கில் யுத்த முயற்சிகள் முடிவை எட்டிக் கொண்டிருப்பதால் அங்கு வெகுவிரைவிலேயே சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

இவ்வாறு சிறிலங்கா ஜனா

(4ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பசாமி வெளியேற்றம் மட்டுமீறிய எதிர்த்தாக்குதல்

### காமினி திஸநாயக்கா கருத்து

(கொழும்பு)

அகில இந்தியவானொலியின் கொழும்புச் செய்தியாளர் ஏ கறுப்பசாமியை வெளியேற்றும் சிறிலங்கா அரசின் முடிவை முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா கடுமையாகக் குறை கூறியுள்ளார். கொழும்பின் செய்தியாளரிடையே பேசிய காமினி திஸநாயக்க மேலும் இது ஒரு மட்டுமீறிய எதிர்த்தாக்குதல் என்று வர்ணித்துள்ளார்.

இதனிடையே திரு. ஏ கறுப்பசாமி நேற்றுகொழும்பிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார்.

## இடம் பெயர்ந்த தீவக மக்களுக்கு புதன்கிழமை முதல் நிவாரண விநியோகம்

(புங்குடுதீவு)

இடம் பெயர்ந்திருக்கும் புங்குடுதீவு, நயினாதீவுப் பகுதி மக்களுக்கு நாளை தொடக்கம் புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிவாரண உணவுப் பொருள்களை விநியோகிக்கவுள்ளது இச்சங்கத்தின் புங்

(4ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளை இலங்கை அனுப்புதல் சிறிலங்கா - இந்தியா இணக்கம்

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகள் குறித்து இந்தியாவும், இலங்கையும் உடன்பாடு ஒன்றினைக் கண்டுள்ளன என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்திற்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து ஆரம்பத்தில் ஒவ்வொன்றிலும் ஐந்நூறு பேர் கொண்ட அணிகளாக இரண்டாயிரம் பேர் அனுப்பப்படுவார்கள் என்றும் இவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது என்றும், இந்த அகதிகளை திருக்கோணமலையில் வரவேற்று பின்னர் அவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### பேபி

மண்டைதீவுப் பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல் ஒன்றின்போது பேபி (சந்திரையா பஞ்சலிங்கம்-வட்டுக்கோட்டை) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம்களின் நலனுக்காக பிரதேச சபைகளின் ஒன்றியம்

- தொண்டமான்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகமாகவுள்ள பிரதேசங்களில் முஸ்லிம் பிரதேச சபைகள் அமைய வேண்டும். வடக்கு - கிழக்கில் இப்படி அமையும் பிரதேச சபைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து முஸ்லிம் பிரதேச சபைகளின் ஒன்றியம் என்று ஓர் அமைப்பைத் தோற்றுவிக்கலாம். இவ்வாறு இனப்பிரச்சினை தொடர்பாக கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய நிலையத்தில் சொற்பொழிவாற்றிய கிராமியத் தொழில்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் கூறினார். அவர்மேலும் பேசுகையில் வட - கிழக்கு மாகாணத்தில் அரசியல் நிர்வாக நடைமுறைகள் பெரும்பான்மை மக்களுக்கும், சிறுபான்மை மக்களுக்கும் இடையே உள்ள நம்பிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாரணர் பவளவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சாரணியம் ஆரம்பித்த 75 வது ஆண்டு நிறைவு விழா (பவள விழா) யாழ். மத்திய கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
இவ்விழாதொடர்பான யாழ். போதி தபால் முதல் உறைகளும் வெளியிடப்பட்டன.

## மட்டக்களப்பு ப. கலைக்கு 50லட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு பல்கலைக் கழகக் கல்லூரியின் விஞ்ஞான கூடத்துக்கு 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு அடுத்த ஆண்டு மொத்தசெலவு 4கோடி50லட்சம் என்பதுகுறிப்பிடத்தக்கது.

அத்துடன் வவுனியாவில் உள்ள ஆசிரியர் கல்லூரிக்கு 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

## விண்ணப்பங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் 1991/92 ஆம் வருட சட்டமாணிப்பட்ட பாட நெறிக்கான விண்ணப்பம் 15 10 91 முதல் விநியோகிக்கப்படுகின்றன.

இது தொடர்பான விண்ணப்பப்படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ். பிராந்திய நிலையத்தில் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனையநாட்களில் காலை 9 30 மணி தொடக்கம் மாலை 3.30மணி வரை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


தாவரவியல்
ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்
கந்தர்மடம் —— யாழ்ப்பாணம்


## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

வீரத்தாயின் மழலையாக

28 - 05 - 1968

!

!

வீரமண்ணின் மாவீரனாக

27 - 07 - 1991



### 2ஆவது லெப். அல்பேட்

நடராசா கலைச்செல்வன் (பாபு)

(தையிட்டி, காங்கேசன்துறை)

யான் பெறுமகனே! என் துணைத் தோழா!
வான்துயர் நீக்கும் மன்னா; வாராய்!
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்!
யானது பொறேன்; என் மகன் வாராய்!

காரைநகர் வீதி. சண்டிலிப்பாய் நாம் வசிக்கும் இல்லத்தில் 24-10-91 வியாழன் நடைபெறவிருக்கும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

கலைவாணி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை

க. நடராசா
குடும்பத்தினர்

(R-1855)

## திறந்த பல்கலைக்கழகம்

யாழ் பிராந்திய நிலையத்தின் பெரும்பாலான மாணவர்களின் தொடர்புகள் ஒழுங்காக இல்லாதபடியால் எல்லா மாணவர்களையும் ஒக்டோபர் மாதம் 25, 26 ஆம் திகதிகளில் (வெள்ளி அல்லது சனி) யாழ் பிராந்திய நிலையத்தில் காலை 9 00-மாலை 4 00 மணிகளுக்கிடையே தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தேர்வுகள் நடத்துவதற்கும் இயன்றளவு மீள் பதிவு செய்தல் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் மாணவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து மாணவர்களையும் 88, 89, 90 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்தும் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யாத மாணவர்கள் உட்பட) தவறாது 25,26 ஆம் திகதிகளில்(வெள்ளி அல்லது சனி)சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

பிரவுண் வீதி,
கொக்குவில்.

மு தில்லைநாதன்
உதவிப்பணிப்பாளர்.

(B/3365)

### யாழ் வர்த்தகர் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

யாழ் நகர் சகல வர்த்தகர்களுக்கும் ஓர் கலந்துரையாடல்/ கருத்தரங்கு 23-10 91 புதன் கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில்விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி முக்கிய பிரமுகர்களால் நடாத்தப்படும்,

நகைக்கடை, ஆங்கில மருந்துக்கடை உட்பட சகல வர்த்தக உரிமையாளர்களும் நேரில் பங்குபற்றல் வேண்டும்.

க. வி. குலரத்தினம்
தலைவர்
யாழ். வர்த்தக சங்கம்

(R/1863)

## 101ஆவது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்




வெளிநாட்டுத் தபால்களை
இன்றே ஒப்படைப்பீர்!
துரித தபால் சேவைக்கு
DHL


## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 22





### ஜெயா நிர்மலன்

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் கொட்டாஞ்சேனை காவல் நிலையத்திற்கு குண்டு வைக்க முயலகையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட குண்டு வெடிப்பில் வீரமரணமெய்திய

❋ இரத்தினசபாபதி பரிபூரணன்
(ஊர்காவற்றுறை)

1986 ஆம் ஆண்டு அடம்பனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

விஜி/பாலதேவன் (சந்தாம்பிள்ளை மரியரட்ணம் - முருங்கன்பிட்டி, மன்னார்)

1987 ஆம் ஆண்டு அராலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலின் போது கொல்லப்பட்ட 29 தமிழர்கள்

அச்சுவேலி, சுண்டுக்குளி ஆகிய பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளியைச் சேர்ந்த தாய், தந்தை, மகன் உட்பட 5 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு குருக்கள் மடம் பகுதியில் தேசவிரோதிகளினால் வெட்டிக் கொல்லப்பட்ட

சின்னத்தம்பி (சதாசிவம் சகாயராசா - தாழங்குடா, காத்தான்குடி)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான இற்றார் இசைக்கலைஞர் செல்லையா கினேற்றன் (18/3 மடம் வீதி, யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொன்னாச்சி கடைச்சந்தியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் தம்பதியினர்

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

ஸ்ரீபன்/திலீபன் (மதியழகன்-காங்கேசன்துறை)

தரவையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**UNIVERSITY OF JAFFNA**

**TENDER NOTICE**

*Tenders are invited for writing identification numbers on items belonging to Faculty of Science, University of Jaffna. (approximately 12,000 Nos.)*

*Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 28-10-91 to 30-10-91 on producing receipt from Bursar, University of Jaffna for the following;*

*(a) Non-refundable deposit– Rs. 250/-*
*(b) Refundable deposit- Rs. 2500/-*

*Perfected tenders should be sent to reach the Registar University of Jaffna on or before 6-11-91 at 10-00 a.m.*

*Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.*

**REGISTRAR**

*University of Jaffna,*
*Thirunelvely,*
*Jaffna.* *(B-3364)*




## லெப்டினன்ட் மாக்கிறெட்

(சிற்றம்பலம் சாந்தினி)

| | |
|---|---|
| வீரஜனனம் | வீரமரணம் |
| **17 02-1971** | **14-07-1991** |

இந்தியரும் சிங்களரும் எமை மிதித்தார்
இடைநடுவில் படிப்பை விட்டுக் களம் புகுந்தாய்
ஈராண்டு காலம் நீ புலிப்படையில்
இருந்ததனால் எதிரிபடை இடுப்பொடித்தாய்
இறப்பினிலும் சிறப்பினை நீ சேர்த்து விட்டாய் - இனி
ஈழத்தில் தமிழ் வாழ்ந்தால் நீயும் வாழ்வாய்
குலப் பெருமை காத்து நின்றாய் கொற்றவனின்
கொள்கை இன்றேல் எமக்கு வழி இல்லை
என்றாய்

இவருக்கும் இவருடன் ஆனையிறவில் வீரமரணமடைந்த ஏனைய வீரவேங்கைகளுக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உடுத்துறை வடக்கு
வேம்படி (R/1795)

இவரது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

துரித தபால் சேவைக்கு

# DHL

C/o Cosmos Marketing Services
120 (200), K.K.S. Road,
JAFFNA.

(B/3296)

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203]

இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் தம்பதியினர்

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**ஸ்ரீபன்/திலீபன்** (மதியழகன்-காங்கேசன்துறை)

தரவையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**லக்ஸ்மண்** (கா. மனோகரன் - முறக்கொட்டாஞ்சேனை)

1990 ஆம் ஆண்டு பலாலி முகாம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**ஜெயா** (லதா கனகராசா - வன்னிச்சியம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை)

**மதுபாலன்** (இரத்தினம் ரஜேந்திரன் - காட்டுப்புலம்)

**ராஜ்சேகர்** (நடராசா விக்னேஸ்வரன் - 6 ஆம் வட்டாரம், கும்புறுபிட்டி)

**கபிலன்**

**திலீப்** (சண்முகராசா சிறிதரன் - சுன்னாகம்)

**நிர்மலன்** (தியாகராஜா ரஜீவன் - கோப்பாய்)

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**மகேஷ்** (வல்லிபுரம் ராமச்சந்திரன் - தவசிகுளம், மிருசுவில்)

புங்குடுதீவு - சிறுப்பிட்டிப்பகுதி கடலோரம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கரையொதுங்கிய தமிழ்ப் பொதுமகள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் பரிபூரணன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 3361)

## சிந்தனைக்கு

உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்,
செயலுக்கு ஒப்பச் சொல்லையும்
இணைத்துச் செய்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 22-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# சமூக அநீதிக்கு இராணுவத் தீர்வு

வடக்கு-கிழக்குப் பகுதியில் கடந்த காலத்தில் நிலவிய அநீதி காரணமாகவே சில பிரிவினர் ஆயுதப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தச் சமூக அநீதியை ஒழிப்பதற்கான நடவடிக்கையிலேயே அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா திருமலை கப்புவெளியில் நடந்த மதவழிபாட்டு நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அதேவேளை வடக்குக் கிழக்கில் யுத்த முயற்சியின் முடிவை எட்டிக் கொண்டிருப்பதால் அங்கு வெகுவிரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

சமூக அநீதி இழைக்கப்பட்டமையினாலேயே வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது என்பதை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வெளிப்படையாக தெரிவித்துள்ளமை வரவேற்கத் தக்கதாயினும் சமூக அநீதி இழைக்கப்பட்ட மக்களின் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வை முன்வைக்கின்றமையே இவர் இப்பிரச்சினையை எந்தளவில் புரிந்துகொண்டுள்ளார் என்பது குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அத்தோடு முன்னைய சிங்களத் தலைவர்களில் இருந்து இவரும் எந்தவிதத்திலும் மாறுபட்டவர் இல்லை என்பதையே காட்டுகின்றது.

முன்னரும் ஒவ்வொரு சிங்களத் தலைவர்களும் தமிழரின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக் கொண்டு அதற்கான இராணுவத் தீர்வையே நாடினர். இதை ஒத்ததாகவே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பேச்சும் நடவடிக்கையும் உள்ளது. ஒரு வீட்டில் பிச்சைக்குச் சென்ற ஒருவனுக்கு மருமகள் கொடுக்கப் பணமில்லை எனத் திருப்பி அனுப்பினாளாம். அப்பொழுது அங்கு வந்த மாமியார் பிச்சைக்காரனைத் திருப்பிக் கூப்பிட்டு அவள் யார் பிச்சை இல்லை என்று கூறுவதற்கு நான் கூறுகிறேன் பிச்சை இல்லை என்று கூறி அனுப்பி வைத்தாளாம்.

இதைப் போன்றதே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நிலைப்பாடும் உள்ளது. முன்னர் வடக்கு கிழக்கு மக்களுக்கு சமூக அநீதி இழைக்கப்பட்டது. அதற்கு எதிராக ஆயுதப் போராட்டம் வெடித்தபோது அப்போதைய சிங்கள அரசியல் தலைவர்களின் அணுகு

## விழுதுகள்



# லெப். கேணல் சந்தோசம்

இரட்டை இலக்கத்தில் அங்கத்தவர்களைக் கொண்டு இயக்கம் விளங்கிய காலத்தில் தாக்குதல்கள் பற்றிய திட்டங்கள் போடப்படும் போது குண்டு வீசுவது என்ற பொறுப்பு சந்தோசத்திற்குத் தான். வெடிமருந்துகள் - இயக்கத்தின் நிதிவசதி இவை மிக மிகக் குறைவாக இருந்த காலம் அது. வீசப்படும் ஒவ்வொரு குண்டுக்கும் நிறையப் பலனை எதிர்பார்த்தோம். ஆகவே நிதானமாக - சரியாக குண்டு வீசுவதற்கு பொருத்தமான ஆளாக சந்தோசம் தான் தெரிவு செய்யப்பட்டான். ஒவ்வொரு தாக்குதலிலும் எமது எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் செயற்பட்ட சந்தோசம் பின்னர் கண்ணிவெடியை சரியாக குறி தவறாது வெடிக்க வைப்பதற்குரிய நபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். போராட்டத்தின் வளர்ச்சிப்போக்கில் திருமலை மாவட்டத் தளபதியாகவும் விளங்கினான்.

விடுதலைப்புலிகளின் வரலாற்றில் முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலான நெல்லியடியில் இடம்பெற்ற பொலிஸ் ஜீப் மீதான தாக்குதல், முதன் முதல் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் நிலையத்தாக்குதலான சாவகச்சேரி தாக்குத[ல்], வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதல் பொலிஸ் நிலையத்தாக்குதலான ஒட்டிசுட்டான் தாக்குதல், மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட முதல் பொலிஸ் நிலையத்தாக்குதலான களுவாஞ்சிக்குடித் தாக்குதல், திருமலையில் மேற்கொள்ளப்பட்ட முதல் பொலிஸ் நிலையத்தாக்குதலான குச்சவெளித்தாக்குதல், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட முதல் கண்ணிவெடித்தாக்குதலான பொன்னாலையில் இடம் பெற்ற கடற்படையினர் மீதான தாக்குதல் திருமலையில் இடம் பெற்ற முதல் கண்ணிவெடித் தாக்குதலான கட்டைபறிச்சான் தாக்குதல், வன்னியில் பெயரை குறிப்பிடாமல் விட முடியாது. எல்லாத் தாக்குதலிலுமே சந்தோசம் பங்குபற்றியிருக்கிறான். அதைப் போலவே திருமலையின் வரலாற்றிலும் சந்தோசத்தின் பெயர் அழியா இடம் பெற்றது.

மாஸ்ரர் - இவ்வாறு தான் 80 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சந்தோசம் திருமலை மக்களுக்கு அறிமுகமானான்.

பெயருக்குத்தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, நகரசபை நிர்வாகம் தமிழரிடம். ஆனால் பஸ் நிலையம் உட்பட நகரின் பல பகுதிகளையும் நிர்வகித்து வந்தவர்கள் குடியேறிய சிங்களவரே. அதேவேளை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் விஷக் காய்ச்சல் போல் சிங்களக் குடியேற்றம் பரவிக்கொண்டிருந்தது. இப்படியானசூழ்நிலையில் தான் சந்தோசம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதியாக மாஸ்ரர் என்ற போர்வையில் இயங்கிக்கொண்டிருந்தான். உறுதியான கட்டடத்திற்கு எவ்வாறு ஒவ்வொரு கல்லாகத் தேர்ந்தெடுப்பார்களோ அதுபோல் சந்தோசம் ஒழுக்கமான - கட்

போராட வைக்கிறது. அத்துடன் சந்தோசம் அவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியவன். காட்டிலே அவர்களுடன் ஒருவராக வாழ்ந்து காட்டியவன். தாக்குதல்களில் எதிரியின் ரவையைச் சந்திக்கக் கூடிய முதல் இடத்தில் கண்ணிவெடியை வெடிக்கச்செய்பவனாகவோ - குறுகியதூர ஆயுதங்களுடன் நின்று போராடுபவனாகவோ நின்று போராடிக்காட்டியவன். அதனால் கடற்படை - விமானப்படை இராணுவம் - பொலிஸ் - ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகள் என நாலாந்தும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிக்கொண்டிருந்தனர். அதனால், படைமுகாம்களின் அதிகரிப்பு போராளிகளுக்கு பயத்தை அதிகரிக்கவில்லை; மாறாக தாக்குதல்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது என எண்ண வைத்தது. அவ்வாறு செயற்படவைத்தது.

சந்தோசம் திருமலைமாவட்டத்தின் அனைத்து மக்களுக்குமே சொந்தமானவன். தென்னமரவடியிலிருந்து வெருகல் வரைக்குமான எல்லாக் கிராமங்களிலுமே இவனது காலடி பதிந்துள்ளது. எல்லாக் கிராமத்தவர்களையுமே இவனுக்குத் தெரியும். ஒவ்வொரு பகுதியிலும் மக்களின் பிரச்சினை என்ன என்பது இவனுக்குத் தெரியும். மொழி[...]

[...]பதிலும் அரசியல் திட்டங்களை தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் பெரும் பங்கு வகித்தான். இதேவேளை பல்கலைக்கழக மாணவன் என்ற நிலையையும் அதை வைத்து வீடு - அறைகளை வாடகைக்கு எடுத்து போராளிகளை தங்க வைப்பதற்கே பயன்படுத்தினான். இவ்வாறு இயக்கத்தின் சகல வேலைகளிலும் சந்தோசத்தின் பங்கு அதிகமாக இருந்தது. ஒருமுறை இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் நோக்கத்துடன் ஒரு பகுதியில் தொடர்ச்சியாக சில நாட்கள் தங்க வேண்டியேற்பட்டது. அந்த நாட்களில் பல்கலைக்கழகத்தில் பரீட்சை. "பரீட்சையில் பங்கு பற்றச் செல்" என்று இவனுக்கு சொல்லப்பட்டது. ஆனால் இவன் மனம் பரீட்சையில் நாட்டம் கொள்ளவில்லை. தாக்குதல் முடியும் வரை போகமாட்டேன் எனக் கூறிவிட்டான். முதலில் போராட்டம். அதன் பின்னர் தான் மற்றவையெல்லாம் என்பதே இவனது நிலை. இச்செய்தியைத்தான் அவன் இன்று இளைய தலைமுறைக்கு விட்டுச் சென்றுள்ளான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு நீறு பூத்த நெருப்பாக போராட்டம் இருந்த காலத்தில் திருமலை மக்களின் மீளக் குடியேற்றம், அவர்களின் புனர்வாழ்வு என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தினான். அத்துடன் இந்திய இராணுவம் பற்றி எச்சரித்தான். "இந்தியப் படை இங்கே அமைதி காக்க வரவில்லை எம்மை அழிக்கத் தான் வருகிறது நாம் அஞ்சக் கூடாது திருப்பித் தாக்க வேண்டும். எங்களுடைய மண்ணை ஆக்கிரமிக்க விடக் கூடாது" என போராளிகளுக்கு அறிவுறுத்தினான். அதுபோல வாழ்ந்து காட்டினான். அதுவரை சிறிலங்கா இராணுவத்தினரால் உணரப்பட்ட இவனது ஆற்றலை பின்னர் இந்தியப்படையினர் உணர்ந்துகொண்டனர். இரண்டாயிரம் சாரம்கட்டியபையன்களின் சக்தி என்ன என்பதை இந்தியப்படையினரும் உணர்ந்து கொண்டனர்.

சொல்லில் நிதானமும் செயலில் வேகமும் கொண்ட சந்தோசம் இந்தியப் படையினருடனான போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதல் லெப். கேணல் ஆவான்.

கூறி அனுப்பி வைத்தானாம்.

இதைப் போன்றதே சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நிலைப்பாடும் உள்ளது. முன்னர் வடக்கு கிழக்கு மக்களுக்கு சமூக அநீதி இழைக்கப்பட்டது. அதற்கு எதிராக ஆயுதப் போராட்டம் வெடித்தபோது அப்போதைய சிங்கள அரசியல் தலைவர்களின் அணுகுமுறை இராணுவத் தீர்வாக இருந்தது. இதனால் பிரச்சினை பூதாகாரமானது. இதேவேளை முன்னர் வடக்கு கிழக்கு மக்களுக்கு சமூகஅநீதி இழைக்கப்பட்டதுதான். அதை நான் ஏற்கிறேன். ஆனால் நானும் கூறுகிறேன் அதற்குத் தீர்வு இராணுவத் தீர்வு தான். சமூக நீதி கிடைக்கச் செய்யப்போவதாகக் கூறும் சிறிலங்கா ஜனாதிபதியின் இந்தப் பேச்சும், நடைமுறையும் வேடிக்கையாகவும், விநோதமாகவுமேயுள்ளது.

அத்தோடு வடக்கு கிழக்கில் யுத்த நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கின்றன. ஆகையினால் விரைவில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவோம் எனச் சிறிலங்கா ஜனாதிபதி தெரிவித்துள்ளமை. சிவில் நிர்வாகம் என அவர் எதைக் கருதுகின்றார் என்பது குறித்து சந்தேகமாகவுள்ளது.

1987, 1989ஆம் ஆண்டுகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது என்று கூறிக் கொண்டே விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவம் தாக்குதலைத் தொடுத்தது. ஆனால், சிவில் நிர்வாகத்தை இறுதி வரை இந்திய இராணுவத்தால் நடைமுறைப்படுத்த முடியவில்லை, ஆனால். இராணுவ நிர்வாகம் ஒன்றையே நடத்த முடிந்தது. இதே போன்றே சிறிலங்கா இராணுவமும் தற்பொழுது தனது கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறிக் கொள்ளும் திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் சிவில் நிர்வாகத்திற்குப் பதில் இராணுவ ஆட்சியே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்தநிலையில், சமூக நீதி நிலைநாட்டுதல், சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துதல் என்ற சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அறிவிப்புக்கள் வடக்கு - கிழக்கில் இராணுவ ஆட்சியை விஸ்தரித்தல் என்ற ரீதியிலேயே உள்ளது. ஆகையினால் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அகராதியில் சமூகநீதி, சிவில் நிர்வாகம் என்பன இராணுவ நடவடிக்கை, இராணுவ ஆட்சி [illegible] கருதப்படும் போல் உள்ளது.

வெடித்தாக்குதலான பொன்னாலையில் இடம் பெற்ற கடற்படையினர் மீதான தாக்குதல் திருமலையில் இடம் பெற்ற முதல் கண்ணிவெடித் தாக்குதலான கட்டைபறிச்சான் தாக்குதல், வன்னியில் முதன்முதல் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலான உமையாள்புரம் தாக்குதல் வரலாற்றுப் புகழ்பெற்ற திருநெல்வேலித்தாக்குதல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம் பெற்ற இராணுவ வண்டி மீதான தாக்குதல்....இப்படியே விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றை எழுதப்புறப்படும் எவரும் சந்தோசத்தின் பிரதிநிதியாக மாவீரர் என்ற போர்வையில் இயங்கிக்கொண்டிருந்தான். உறுதியான கட்டடத்திற்கு எவ்வாறு ஒவ்வொரு கல்லாகத் தேர்ந்தெடுப்பார்களோ அதுபோல் சந்தோசம் ஒழுக்கமான - கட்டுப்பாடான இளைஞர்களாக ஒவ்வொருவராகத்தேர்ந்தெடுத்தான். அவ்வாறு அன்று சந்தோசம் போட்ட உறுதியான அத்திவாரம் தான் இன்றும் சுமார் நூற்றி இருபத்தைந்துக்குமேற்பட்ட படைமுகாம்களைக் கொண்டிருக்கும் திருமலை மாவட்டத்தில் இன்றும் படையினரின் இழப்பு பற்றிய செய்திகளை வரச்செய்கிறது. உறுதியுடன் போராளிகளை

மக்களிலுமே இவனது காலடி பதிந்துள்ளது. எல்லாக் கிராமத்தவர்களையுமே இவனுக்குத் தெரியும் ஒவ்வொரு பகுதியிலும் மக்களின் பிரச்சினை என்ன என்பது இவனுக்குத் தெரியும் மொத்தத்தில் திருமலையையே கரைத்துக்குடித்தவன் என்று சொல்லலாம்

இயக்கத்தின் அரசியல் வேலைகளின் விஸ்தரிப்பிலும் சந்தோசத்தின் பங்கு மிகப் பெரியது உணர்வு என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவனாக இருந்தது முதல் ஆரம்பகாலத்தில் இயக்கத்தினால் வெளியிடப்படும்.

துண்டுப்பிரசுரங்களை தயாரிப்பதிலும் அதை விநியோகிப் ...ந்து கொண்டான்.

சொல்லில் நிதானமும் செயலில் வேகமும் கொண்ட சந்தோசம் இந்தியப் படையினருடனான போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதல் லெப். கேணல் ஆவான். .. எமது போராட்டத்தில் பெரும்பாலான அத்தியாயங்களின் மூலவர் என்று குறிப்பிடப்படும்போது சந்தோசத்தின்பெயர் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றதோ அதுபோலவே இந்திய இராணுவத்தினருடனான போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட முதல் லெப். கேணல் என்றும் இவனை வரலாறு கூறுகின்றது

## சென்னையில் முகமூடி கொள்ளையர்

(சென்னை)

திருப்பதியிலிருந்து சேலம் வழியாக திருச்செந்தூருக்கு கடந்த சனிக்கிழமை சென்று கொண்டிருந்த திருவள்ளுவர் பேருந்து முகமூடி அணிந்தஇருபது கொள்ளையர்களால் வழி மறிக்கப்பட்டது.

பேருந்தில் ஏறிச்சாரதியைக் கத்தியால் குத்தியதில் அவர் படுகாயம் அடைந்தார்.

பயணிகளைக் கொள்ளையர்கள் தாக்கத் தொடங்கிய போது சாரதி படுகாயத்துடன் பேருந்தை ஓட்டிச்சென்று விட்டார்.

கொள்ளையர்கள் ஓடும்வண்டியிலிருந்து குதித்துத் தப்பித்துச்சென்றுவிட்டனர் ஓட்டுநர் சேலம்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# விடுதலைப் போராட்டத்தை அழிக்க துரோகிகளால் முடியவில்லை

- மாறன்

(யாழ்ப்பாணம்)

இந்தியப்படையினர் இங்கு நிலைகொண்டிருந்த காலத்தில் அப்படையினருடன் இணைந்து துரோகிகளும் சந்தர்ப்பவாதிகளும், எமது விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட முயன்றனர். அவர்களின் எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது எமது மக்களின் இப்போராட்டத்தை எவராலும் எப்போதும் அழித்துவிட முடியாது. அது ஆழமாக வேரூன்றி விட்டது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று 42 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டுபேசும்போது. யாழ். அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மாறன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது, எந்த நாட்டிலும் சட்டத்தை மீறும் குற்றவாளிகள் தண்டனை பெறுவது தெரிந்ததே. அந்த வடிவில்தான் இவர்களின் கைதும் இடம் பெற்றது என்றார்.

தலைமைச் செயலகக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. பரா அங்கு பேசும் போது, தற்போது எமது மண்ணில் சமூக விரோதச் செயல்கள் மிகக் குறைந்துள்ளன என்றார்.

யாழ். மாவட்டகொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அங்கு பேசும்போது. எமது அமைப்பு தேசத்திலும், தேசத்தில் உள்ள ஒவ்வொரு மக்களின் நலத்திலும் அக்கறை கொண்டுள்ளது நாம் ஒரு உன்னதமான, ஆரோக்கியமான சமுதாயத்தைப்படைக்கப்போராடுகின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமுதாயத்தை சீரழிக்கவோ, போராட்டத்தை காட்டிக் கொடுக்கவோ எவரையும் அனுமதிக்க மாட்டோம் என்றார். (நி)

## வடமராட்சி மக்கள் வீடு திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப்பகுதியில் இதுவரை நாட்களும் இருந்துவந்த பீதி தணிந்து வருவதை அடுத்து அப்பகுதி மக்கள் மீளச் சென்று குடியமர்கின்றனர் என்று அரச சார்பற்ற நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

யாழ் நகரை அண்டிய பகுதியிலும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் தென்மராட்சிப் பகுதியிலும் தஞ்சமடைந்திருந்த அகதி மக்களில் பலர் மீளச் சென்று குடியமர்கின்றனர் என்று அவர் தெரிவித்தார். (தி)

### மாவீரர்தின கலை நிகழ்ச்சி

## ஒக். 30க்கு முன் பிரதிகளை அனுப்பி வைக்கவும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தில் மேடையேற்றப்படும் கலை நிகழ்ச்சிகளின் எழுத்துப்பிரதிகள் யாவும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கோண்டாவிலில் உள்ள கலை, பண்பாட்டுக்கழகச் செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் கேட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மாவீரர் வார நாட்களில் அரங்கேற்றப்படும் கலை நிகழ்ச்சிகள் யாவும் கலை பண்பாட்டுக்கழகத்தின் அங்கீகாரத்தை கட்டாயம் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் நிகழ்ச்சிப் பிரதிகள் கழகத்தால் பார்வையிட்டு அனுமதி பெற்று இறுதி ஒத்திகை மூலம் ஒப்புதல் வழங்கப்படும்.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை தமிழ்த் தேசிய நாளையொட்டி மாவீரர் வாரம் பெரியளவில் கொண்டாடப்பட உள்ளது. (தி)

### 45-ம் நாள் நினைவஞ்சலியும்

### அந்தியேஷ்டி அழைப்பும்



## பாடசாலை இயங்கவில்லை

(குருநகர்)

நேற்று திங்களன்று யாழ். நகர்ப் பகுதிப் பாடசாலைகள் நடைபெறவில்லை.

பாடசாலைகளுக்கு மாணவ மாணவிகள் சிறிதளவில் வந்து திரும்பியதைக்காணமுடிந்தது

ஒரு சில பாடசாலைகள் அகதி முகாம்களாகவும் இரவு நேரம் தஞ்சமடையும் விடுதிகளாகவும் பொதுமக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (21)

### சிறிலங்கா

தொடர்ச்சியாக ஒரு மணி நேரம் நடத்திய தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரம் செய்தி எழுதப்படும்வரை கிடைக்கவில்லை.

இதேவேளை குருநகர் பகுதியில் இருந்து அநேக படகுகள் மீன்பிடிக்க குறிப்பிட்ட இடத்திற்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (21)

### இராணுவ

திக்க நிலையில் நின்று பேச்சுக்களை நடத்த முற்பட்டால் அதனை தாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென விடுதலைப் புலிகள் பலதடவைகள் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். எனவே அரசு தொடர்ந்து இராணுவ ஆக்கிரமிப்பு முனைப்புகளில் ஈடுபடுவதும், தமிழ் மக்கள் மீது பொருளாதாரச் சுமைகளை சுமத்துவதும் சமாதான தீர்வுக்கான சூழ்நிலையை தோற்றுவிக்காது'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### வடமராட்சி

அரசாங்க அதிபரால் சிபார்சு செய்யப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது

நேற்று நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் உலர் உணவுப் பொருள் விநியோகத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரும் யாழ். செயலக உயர் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர் (தி)

### புங்குடுதீவிலிருந்து

கோயில் கோபுரத்திலிருந்து இறங்கி பதுங்கிப்பதுங்கி கடற்கரையை அடைந்த போது திடீரென அங்கு படுத்திருந்த இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் அவர் தாம் உடலுக்குள் பாய்ந்து நீந்தி வந்ததாகவும்

### மத்திய கிழக்கு

## சமாதான மாநாட்டில் இஸ்ரேல் கலந்துகொள்ளும்

(ஜெருசலேம்)

மேற்காசிய சமாதான மாநாட்டில் இஸ்ரேல் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர் என்று இஸ்ரேலிய பிரதமர் சமீர் தெரிவித்துள்ளார்.

ஜெருசலேமில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சர்கள் கூட்டத்தை அடுத்து சமீரின் இந்த அறிவிப்பு வெளியானது.

ஆறுமணி நேரம் நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில்சமாதானமாநாட்டிற்கு கலந்து கொள்வதுபற்றி விவாதிக்கப்பட்டதாகவும்,பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அமைச்சரவையின் ஆதரவு பிரதமருக்குக் கிடைத்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது

இஸ்ரேலின் இந்த அறிவிப்பினை ஜோர்டான் வரவேற்றுள்ளது.

### கொழும்புச்

போர் நிறுத்தமும் பொருளாதார தடை நீக்கமும் செய்யப்படவேண்டுமெனவலியுறுத்தப் பட்டதாகவும் இவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### இந்திய

கனி கிரிபத்கொடையில் நடைபெற்ற அதிருப்தியாளர் கூட்டத்தில் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பூகோள ரீதியில் இலங்கை இந்தியாவுக்கு அண்மித்த நாடு கோடிக்கணக்கான தமிழர்கள் அங்கு வாழ்கின்றனர். மொழி, கலாசாரம், மதவழிக்கை ஆகியவற்றில் இந்தியாவுடன் நாம் ஒன்றிணைந்திருக்கிறோம் இந்தியாவுக்கு தடிமல் ஏற்பட்டாக்கூட இங்கு அது ஒரு சில மணி நேரத்திற்குள் பரவிவிடும் என்றும், இந்தியப் படையினர் இங்கு தங்கியிருந்த காலத்தில் மாகாண சபைத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் ஆகியனவும் நடத்தப்பட்டன எனவும் தெரிவித்தார்.

### அகதிகளை

களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்க சிறிலங்கா அதிகாரிகள் இசைந்துள்ளனர் என்றும் என். எம் ஜர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஏறக்குறைய இரண்டேகால் லட்சம் தமிழ் அகதிகள் இருக்கின்றனர் என இந்திய சாப்பில் தெரிவிக்கப்

### பட்டதாரி

விக்கம் தெரிவித்துள்ளார் விண்ணப்பதாரிகள் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பார்வையிட்டு அதைப் போன்ற ஒன்றை தயாரித்து பூர்த்தியாக்கி ஐம்பதுரூபா முத்திரை ஒட்டி நவம்பர் 25ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

### யுத்த

திகதி திருக்கோணமலையில் இடம்பெற்ற பௌத்த மத நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டார்

தொடர்ந்து பேசிய பிரேமதாசா ''வவுனியாவிற்கு அப்பால் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தக் கூடிய சாத்தியம் உண்டென்று டென்சில் கொப்பேகடுவ எனக்கு அறிவித்துள்ளார் என்றும் ஆகவே அரசாங்கம் சிவில் நிர்வாகத்தை விரைவிலேயே ஏற்படுத்தலாம் என நினைக்கிறது'' என்றும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் வடக்கு கிழக்கில் தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றும் இந்த சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்த தவறக் கூடாது என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

### புதன்கிழமை

குடுதியில் உள்ள 1ஆம், 2ஆம் 3ஆம், இலைகளின் பாவனையாளர்களுக்கு யாழ். சிறாம்பியடிலேன் மணியம் கட்டடக் கிளையிலும் 5ஆம், 6ஆம் 7ஆம் கிளைகளின் பாவனையாளர்களுக்கு கே. கே. எஸ் வீதி ஹனிப கட்டடத்தில் உள்ள கிளையிலும் ஏனைய 9ஆம், 10ஆம், 12ஆம் 13ஆம், 14ஆம், 15ஆம் 16ஆம் கிளைகளிற்குரியவர்களுக்கு ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள இரண்டு கிளைகளிலும் மேற்படி நிவாரணம் வழங்கப்படும். 2288)

### முஸ்லிம்களின்

நாட்டங்களைச் சமன் செய்யக்கூடியதாக அமைய வேண்டும்

இத்துடன் முஸ்லிம் பிரதேச சபைகள் அடுத்தடுத்து அல்லது தொட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை ஆனால் முஸ்லிம் பிரதேச சபைகளின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசம் எல்லாம் முஸ்லிம் பிரதேச சபைகளின் ஒருமித்த தன்மையால் நிர்வகிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்

### 45-ம் நாள் நினைவஞ்சலியும்

### நன்றி நவிலலும்

அன்னைக்கு மகளாக



மண்ணுக்கே மகளாக



ரயில் கோபுரத்திலிருந்து இறங்கி பதுங்கிப்பதுங்கி கடற்கரையை அடைந்த போது திடீரென அங்கு படுத்திருந்த இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் ஆனால் தாம் கடலுக்குள் பாய்ந்து நீந்தி வந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

அதிகாரிகள் இசைந்துள்ளனர் என்றும் என். ராம் ஜீ தெரிவித்தார்.

இந்தியாவில் ஏறக்குறைய இரண்டேகால் லட்சம் தமிழ் அகதிகள் இருக்கின்றனர் என இந்திய தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## 'கப்டன்' அக்கினோ
## (செல்வி. இராசரத்தினம் கலைவாணி)

வீரஜனனம் 26-01-1968 — வீரமரணம் 08-09-1991

மாமனிதன் இராசரத்தினத்தின் காமகளாய்
மேவுயர் கல்வியினில் மிகு திறமை காட்டி நின்று
புகழ்மயக்கும் கல்விதனைப் போற்றாது உதறிவிட்டு
வீரமுடன் போராடும் விடுதலைப்புலி நானென்று
ஆர்வமுடன் ஓடிச்சென்ற வீரவேங்கை கலைவாணியே
வீறுடனே போராடும் கப்டன் அக்கினோவே
தமிழ் வழங்கும் நாடுகளுள் தமிழீழத் தனியரசு
புவிமீது முதலமைத்துப் புலிக்கொடியை ஏற்றுபவர்
புகழ் பூத்த விடுதலைப் புலிகள்தான் எனக்கூறியவள்
மணலாற்றுப் போர்முனையில் மானமுடன் போராடி
மடிந்ததனைக் கேட்ட திர்ச்சி மயக்கம் அடைந்தோமே
மடிந்தஎல்லாவேங்கைகட்கும் மனமார்ந்த அஞ்சலியே

22-10-91 செவ்வாய்க்கிழமை இன்று) எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரது அந்தியேஷ்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி ஏகுமாறு விடுதலைப் புலிகள், உற்றார், உறவினர், அன்பர் அனைவரையும் வேண்டுகின்றோம்.

'கலா பவனம்'
கைதடி-நுணாவில்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(B/3367)

## வாகன வாடகைக்கான
## கூறுவிலைகோரல்

கொழும்பு, அனுராதபுரம், வவுனியா, களஞ்சியங்களிலிருந்து பசளை, விவசாய இரசாயனப் பொருள்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றி வருவதற்கு லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது.

விண்ணப்பங்கள் பின்வரும் விபரங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

1. விண்ணப்பதாரியின் பெயரும் விலாசமும்.
2. ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.

2 கோரப்படும் லொறிக்கூலி

3 1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி முழுத்தூரத்துக்குமான கூலி

3·2 கொழும்பு - புதுக்குடியிருப்பு/துணுக்காய்
அனுராதபுரம் - புதுக்குடியிருப்பு/துணுக்காய்
வவுனியா - புதுக்குடியிருப்பு/துணுக்காய்

4. தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

இ. தர்மதலசிங்கம்
அரசாங்க அதிபர்
முல்லைத்தீவுமாவட்டம்

(B/3360)



அன்னைக்கு மகளாக உதயம் 18-09-71

மண்ணுக்கே மகளாக அஸ்தமனம் 08-09-91

## லெப்ரினன்ட் மதுரா
## (பரமு வடிவாம்பாள்)

வண்ணமலர் போல் சிரித்து வாழவந்த மதுரா!
எண்ண மனம் ஏங்கிடுதே நாளும்-திண்ணமுடன்
வென்றுகொடி ஏற்றிடுவர் வேங்கைகளும் ஈழமண்ணில்
அன்றுனது ஆத்மசாந்தி காண்பாய்.
விடியலைத் தேடிநின்ற வடிவை நாம் பிரிந்து படும்
துயரநிலை யோக்கமன வாஞ்சையுடன் தேடிவந்து
கூடிநின்று ஆறுதலைத் தரமுயன்ற பேர்களையும்
மாலையொடு மலர்கள் தூவி பிரசுரங்கள் விட்டும்
தோள் கொடுத்து காவி இடு காடு கொண்டு சேர்த்து
வேட்டுகளும் தீர்த்துவீர வணக்கமதும் செய்த
நண்பரொடு அன்பரையும்
உற்றாரொடு உறவோரையும்,
இன்றவளின் ஆத்ம சாந்தி கிரியைகளில் பங்கு
கொண்ட அன்புடைய அனைவரையும்
எம் நெஞ்சமதில் ஏத்தி நன்றிதனை
நவிலுகின்றோம் ஏற்க.

தேவன் வீதி
சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.
1991-10-22

உம் பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர், சகோதரர்,
குடும்பத்தினர்.

(B/3366)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.